# ***DEPOSITION OF WITNESS***
# **IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

## **CC No.577/2023**

## **PW: 3**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ஜெய்குமார் | Occupation: | விவசாயம் |
| Father's Name : | திரு.அய்யனா | Religion : | இந்து |
| Village : | தேனாம்படுகை | Age : | 53 |
| Taluk : | கும்பகோணம் | | |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 14th day of August 2024.

Signature of Witness.

(Accused present. Additional Public Prosecutor Present. Defence counsel present. )

**முதல் விசாரணை :**

நான் தேனாம்படுகையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.2 அஜீத்குமார் எனது மகன். அ.சா.1 அய்யப்பன் எனது மருமகன். எதிரி ராஜ்குமார் எனது அண்ணன் மகன். எதிரி ராஜ்குமாருக்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. எதிர் வீட்டில் உள்ளவர்களுக்கும் எங்களுக்கும் தான் பிரச்சனை. என் பெரியம்மா இறந்து விட்டார். எதிர் வீட்டுக்காரர் தண்ணீர் எடுக்க சொம்பு எடுத்து கொடுத்தார். என் அண்ணன் வீரையன் எடுத்து கொடுக்கட்டும் நீ யார்

எடுத்து கொடுக்க என்று நான் கேட்டேன். என் மருமகனிடம் சொல்லி என்னை வரக்கூடாது என்று ராஜ்குமார் குடும்பத்தினர் கூறிவிட்டார்கள். நான் வந்தால் பிரச்சனை செய்வேன் என்று ராஜ்குமாரும், சசியும் என்னை வரக்கூடாது என்று கூறிவிட்டார்கள். 3 மாதங்களாக எங்களுக்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை.

2) 2, 3 வருடங்களுக்கு முன்பாக 17-ம் தேதி நான் படிக்காததால் மாதம் தெரியவில்லை. நான் வீட்டில் இருந்தபோது இரவு 9.00 மணிக்கு படுத்து விட்டேன். திடுதிடுவென சத்தம் கேட்டது. நான் எழுந்து வந்தபோது ஓட்டை முழுவதும் அடித்து உடைத்தான். நான் எவன்டா என்று வீட்டை விட்டு வெளியே வந்தபோது இரும்பு ராடால் எனது தலையில் ராஜ்குமார் அடித்தார். அவருடன் இருவர் வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் அருவாள் வைத்திருந்தார்கள். மறுபடியும் என்னை இடது உள்ளங்கையில் வெட்டியபோது எனக்கு மயக்கம் வந்துவிட்டது.

3) ராஜ்குமாரும், அவருடன் வந்தவர்களும் அவர்களுக்குள் ஏன்டா வெட்டின என்று மல்லு கட்டிக் கொண்டார்கள். ராஜ்குமார் என் மகனின் தலையில் ராடால் வெட்டினார். இன்னொருவர் என் மகனின் தலையில் அருவாளால் வெட்டினார். எனக்கு நினைவு தப்பி விட்டது. என்னை ஆம்புலன்சில் ஏற்றி சென்றார்கள். கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். மருத்துவர்கள் எனக்கு தையல் போட்டார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** ;

வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA

Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2024.08.14 17:01:58 +0530

*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*